# முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலையை முதல்வர் ஸ்டாலின் நாளை திறக்கிறார்: அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்பு


முன்னாள் பிரதமர் வி.பி.சிங்

**சென்னை:** சென்னை மாநில கல்லூரியில் நிறுவப்பட்ட முன்னாள் பிரதமர் வி.பி.சிங்-கின் சிலையை முதல்வர் நாளை திறந்து வைக்கிறார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசு சார்பில் முன்னாள் இந்திய பிரதமர் வி.பி.சிங்-குக்கு சென்னை மாநில கல்லூரியில் ரூ.52 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வி.பி.சிங் சிலையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை காலை 11 மணிக்கு திறந்து வைக்கிறார். இதற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளன.

வி.பி.சிங் இந்திய பிரதமாக இருந்த போதுதான் காவிரி நதி நீர் பிரச்சினைக்கு தீர்ப்பாயத்தை அமைத்து தந்தார். உள்நாட்டு விமான நிலையத்துக்கு காமராஜர் பெயரையும், பன்னாட்டு விமான நிலையத்துக்கு அண்ணாவின் பெயரையும் சூட்டினார்.

மேலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்காக பி.பி.மண்டல் தலைமையில் கமிஷன் அமைத்து, 2-வது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தால், அரசு பணியிடங்களில் 27 சதவீத இடஒதுக்கீட்டை வழங்கலாம் என்ற பரிந்துரையை செயல்படுத்தினார்.

எனவே, வி.பி.சிங் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் தமிழக அரசின் சார்பில் சென்னை மாநில கல்லூரி வளாகத்தில் அவரது சிலை திறப்பு விழா நிகழ்ச்சி நடக்கிறது. இதில், உத்திரபிரதேச முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ், அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## டிஎன்பிஎஸ்சி வருடாந்திர கால அட்டவணை: டிச.2-வது வாரத்தில் வெளியீடு




**சென்னை:** அடுத்த ஆண்டு நடத்தப்பட உள்ள போட்டித் தேர்வுகளுக்கான டிஎன்பிஎஸ்சியின் வருடாந்திர காலஅட்டவணை டிசம்பர் 2-வது வாரத்தில் வெளியாக உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

தமிழக அரசின் பல்வேறு துறைகளில் உள்ள காலிப் பணியிடங்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) நடத்தும் போட்டித் தேர்வுகள் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றன. பல்வேறு அரசுத் துறைகளில் நிரப்பப்பட உள்ள காலிப் பணியிடங்கள், அதற்கான போட்டித் தேர்வு குறித்த விவரங்கள் அடங்கிய வருடாந்திர கால அட்டவணையை டிஎன்பிஎஸ்சி ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. தேர்வர்கள் முறையாக திட்டமிட்டு போட்டித் தேர்வுகளுக்கு தயாராக ஏதுவாக இந்த அட்டவணை வெளியிடப்படுகிறது.

அதன்படி, 2024-ம் ஆண்டுக்கான போட்டித் தேர்வு, காலிப் பணியிடங்கள் அடங்கிய டிஎன்பிஎஸ்சி-யின் வருடாந்திர கால அட்டவணை டிசம்பர் 2-வது வாரத்தில் வெளியிடப்பட உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அந்த அறிவிப்பில் 30 விதமான போட்டித் தேர்வுகள் மூலம் சுமார் 15 ஆயிரம் காலிப் பணியிடங்கள் நிரப்புவதற்கான விவரங்கள் இடம்பெறும் எனவும் கூறப்படுகிறது. இந்த தகவல், எதிர்பார்ப்பில் உள்ள தேர்வர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக உள்ளது. முன்னதாக இந்த ஆண்டு நடத்தப்பட்ட குரூப் 1, குரூப் 2 முதன்மைத் தேர்வு முடிவுகள் அடுத்த மாதம் வெளியிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அந்தமான் அருகே நாளை புதிய காற்றழுத்ததாழ்வுப் பகுதி உருவாகிறது: டிச.1 வரை மழை நீடிக்கும்


கோப்புப்படம்

**சென்னை:** அந்தமான் அருகே புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி நாளை உருவாகிறது. தமிழகத்தில் வரும் டிச.1-ம் தேதி வரை மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.


இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பா.செந்தாமரைக்கண்ணன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதையொட்டியுள்ள தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நாளை காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது வரும் 29-ம் தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும். கிழக்கு திசைக் காற்றில் வேக மாறுபாடு நிலவுவதால், தமிழகத்தில் சில இடங்களிலும், புதுச்சேரி மாநிலத்திலும் இன்று இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாளை முதல் டிச.1-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்தில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய, லேசான அல்லது மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 31 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 24 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கும்.

நவ. 25-ம் தேதி (நேற்று) காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக சென்னை அடையாரில் 8 செ.மீ., தரமணியில் 7 செ.மீ., கடலூர் மாவட்டம் புவனகிரி, சென்னை அண்ணா நகர், பெருங்குடி, ஆலந்தூர், பெரம்பலூர் மாவட்டம் எறையூர் ஆகிய இடங்களில் 5 செ.மீ., கடலூர் மாவட்டம் தொழுதூர், சென்னை அண்ணா பல்கலைக்கழகம், தேனாம்பேட்டை, ஐஸ் ஹவுஸ், சென்னை விமானநிலையம், மீனம்பாக்கம், நுங்கம்பாக்கம், பெரம்பலூர் மாவட்டம் லப்பைக்குடிகாடு ஆகிய இடங்களில் 4 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

அந்தமான் அருகே உருவாகும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக வரும் 27, 28-ம் தேதிகளில் தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டிய அந்தமான் கடல் பகுதிகளில் அதிகபட்சமாக 65 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும். எனவே, அப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆதித்யா விண்கலம் ஜனவரி 7-ம் தேதி எல்-1 சுற்றுப்பாதையில் நுழையும்: இஸ்ரோ தலைவர் சோம்நாத் தகவல்



**சென்னை:** ஆதித்யா விண்கலம் சூரியனின் எல்-1 சுற்றுப்பாதைப் பகுதியில் ஜனவரி 7-ம் தேதி நுழையும் என்று இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்தார்.


சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆராய்வதற்காக ஆதித்யா எல்-1 எனும் நவீன விண்கலத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது. இந்த விண்கலம் பிஎஸ்எல்வி சி-57 ராக்கெட் மூலம் ஹரிகோட்டாவில் இருந்து கடந்த செப்டம்பர் 2-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. தொடர்ந்து சூரியனின் எல்-1 பகுதியை நோக்கிவிண்கலம் சீரான வேகத்தில் பயணித்து வருகிறது. பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டுமையத்தில் இருந்தவாறு விண்கலத்தின் செயல்பாடுகளை விஞ்ஞானிகள் கண்காணிக்கின்றனர்.

இந்நிலையில் ஆதித்யா விண்கலமானது சூரியனின் எல்-1 பகுதியில் வரும் ஜனவரி 7-ம் தேதிநுழையும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுகுறித்து இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத்திருவனந்தபுரத்தில் நிருபர்களிடம் கூறும்போது, ‘புவியில் இருந்து 15 லட்சம் கி.மீ தொலைவில் உள்ளசூரியனின் எல்-1 பகுதியை நோக்கிய தனது பயணத்தின் இறுதிகட்டத்தில் ஆதித்யா விண்கலம் உள்ளது. தற்போதைய சூழல்களின்படி எல்-1 சுற்றுப்பாதையில் விண்கலம் ஜனவரி 7-ம் தேதி நுழையும்.அதன்பின் ஆதித்யா விண்கலம் எல்-1 பகுதியை மையமாக கொண்ட சூரிய ஒளிவட்டப் பாதையில் (Halo Orbit) நிலைநிறுத்தப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

இதுதவிர மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின்அடுத்தகட்ட சோதனை ஓட்டம் அடுத்தாண்டு தொடக்கத்தில் நடைபெறும். இதில் மனித வடிவிலான ரோபோவும் அனுப்பப்பட உள்ளது.அதேபோல், முழுவதும் தனியார்தொழிற் நிறுவனங்கள் பங்களிப்பில் வடிவமைக்கப்பட்டுவரும் பிஎஸ்எல்வி ராக்கெட் 2024 அக்டோபரில் விண்ணில் ஏவப்படும்.

இதற்கிடையே ஆதித்யா விண்கலம் எல்-1 பகுதியை மையமாக கொண்ட சுற்றுப்பாதையில் வலம்வந்தவாறு சூரியனின் கரோனா மற்றும் போட்டோஸ்பியர், குரோமோஸ்பியர் பகுதிகளை ஆய்வு செய்யவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்பதில் பின்னடைவு: அமெரிக்க இயந்திரம் உடைந்தது




கோப்புப்படம்

**டேராடூன்:** உத்தராகண்டில் சில்க்யாரா- பர்கோட் இடையே அமைக்கப்படும் சுரங்கப் பாதையில் கடந்த 12-ம் தேதி மண்சரிவு ஏற்பட்டது. இதில் 41 தொழிலாளர்கள் சுரங்கப் பாதைக்குள் சிக்கிக் கொண்டனர்.

அவர்களை மீட்க ராட்சத இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு மணல் குவியலின் பக்கவாட்டில் துளையிடப்பட்டன. கடினமான பாறைகளை துளையிட முடியாமல்

பல்வேறு இயந்திரங்கள் பழுதாகின. அமெரிக்க தயாரிப்பு ஆகர் இயந்திரம் மட்டும் பக்கவாட்டில் துளையிட்டு தொடர்ந்து முன்னேறியது.

சுமார் 60 மீட்டர் தொலைவுக்கு மணல், பாறைகள் சுரங்கப் பாதையை மூடியிருக்கிறது. இதில் அமெரிக்க இயந்திரம் பக்கவாட்டில் 47 மீட்டர் தொலைவுக்கு துளையிட்டு இரும்பு குழாய்களை பொருத்தியது. இன்னும் 14 மீட்டர் தொலைவுக்கு துளையிட வேண்டிய நேரத்தில் அளவுக்கு அதிகமான வேகத்தில் அமெரிக்க இயந்திரம் இயக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதன்காரணமாக அந்த இயந்திரம் உடைந்து சுரங்கப் பாதையில் சிக்கிக் கொண்டுள்ளது. இதனால் மீட்பு பணியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஆஸ்திரேலிய சுரங்க நிபுணர் அர்னால்டு டிக்ஸ் கூறியதாவது:

அமெரிக்க தயாரிப்பு ஆகர்இயந்திரத்தை மீண்டும் பயன்படுத்த முடியாது. புதிய ஆகர் இயந்திரம் மூலம் துளையிட வாய்ப்பில்லை. எனவே மாற்று வழிகள் குறித்து ஆலோசித்து வருகிறோம். சுரங்கத்தின் மேற்பகுதியில் இருந்து அடிப்பாகம் வரை செங்குத்தாக துளையிட்டு தொழிலாளர்களை மீட்க திட்டமிடப்பட்டு உள்ளது. வேறு சிலதிட்டங்களையும் பரிசீலித்துவருகிறோம். கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்பாக தொழிலாளர்கள் மீட்கப்படுவார்கள். இவ்வாறு அர்னால்டு டிக்ஸ் தெரிவித்தார்.

மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் தேசிய பேரிடர் மீட்புப் படை வட்டாரங்கள் கூறியதாவது:

சுரங்க பாதையில் சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் மூலம்உள்ளே இருந்து தோண்டலாமா என்பது குறித்து பரிசீலிக்கப்பட்டது. ஆனால் இது மிகவும் ஆபத்தானது. உள்ளே மண் சரிவு ஏற்பட்டால் மிகப்பெரிய சிக்கல் ஏற்படும்.

எனவே சுரங்கப் பாதையின் மேற்பகுதியில் இருந்து அடிப்பாகம் வரை செங்குத்தாக துளையிட திட்டமிடப்பட்டு உள்ளது. மேலிருந்து அடிப்பாகம் வரை 86 மீட்டர் ஆழத்துக்கு துளையிட வேண்டும். இதிலும் சிக்கல்கள் உள்ளன. சுரங்க

பாதையில் உட்பகுதியில் மண் சரிவு ஏற்படாத வகையில் துளையிட வேண்டும். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**தமிழக நிபுணர்கள்:** தமிழகத்தின் திருச்செங் கோட்டை சேர்ந்த தரணி ஜியோ டெக் நிறுவனம் உத்தராகண்ட் சுரங்கப் பாதை மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கிறது. கடந்த 21-ம் தேதி இந்த நிறுவன நிபுணர்கள், பிஆர்டி-ஜிடி5 என்ற இயந்திரத்தின் மூலம் மணல் குவியலை துளையிட்டு 6 அங்குலம் விட்டம் கொண்ட குழாயை தொழிலாளர்கள் இருக்கும் இடம் வரை செலுத்தினர். இது மீட்புப் பணியில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது.

அதுவரை மிகச் சிறிய குழாய்கள் வழியாக ஆக்சிஜன் மற்றும்உலர் பழங்கள் மட்டுமே தொழிலாளர்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன. தற்போது தமிழக நிபுணர்கள் பொருத்திய பெரிய குழாய் வழியாக ரொட்டி, கிச்சடி உள்ளிட்ட சமைத்த உணவு வகைகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அதோடு டிஆர்டிஓ-வின் அதிநவீன கேமரா மூலம் 41 தொழிலாளர்களும் பாதுகாப்பாக இருப்பது கண்காணிக்கப்பட்டு வருகிறது.

EVA STALIN IAS